2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனைவரும் உட்காருங்கள். நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். துறையிலிருந்து பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)* Please sit down. *(குறுக்கீடுகள்) பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது.* Please sit down. *(குறுக்கீடுகள்) அனுமதியில்லை* Please sit down. *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுவார்கள், தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டுள்ளார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய பிறகு நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்)* Please sit down. *(குறுக்கீடுகள்)* Please sit down. *(குறுக்கீடுகள்) அனுமதியில்லை நான் எழுந்து நிற்கும்போது நீங்கள் நிற்பது அவை மரபு அல்ல, நடவடிக்கை எடுக்கவேண்டியது இருக்கும். தயவுசெய்து நீங்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். அவர்கள் பேசிய பிறகு நீங்கள் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதற்கே இடையூறு செய்தால் சரியாக இருக்காது. அது முறையல்ல.* Please sit down.

(தேசிய முற்போக்கு திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)